## *7*

# கடந்த காலத்தில் இருந்து ஒரு எச்சரிக்கை

## [3:7–4:16]

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் "ஊக்கமூட்டுதலின் வார்த்தையாக" உள்ளது. சரியானதைச் செய்யும்படி வேண்டுகோள் விடுத்தல் என்பது அந்த ஊக்கமூட்டுதலின் ஒரு அம்சமாக உள்ளது. அதுவே இந்த நிருபத்தினுடைய புத்திமதிகூறுதலின் இரண்டாம் பகுதியான 3:7-4-16ன் நோக்கமாக உள்ளது.[1] இவ்வசனப்பகுதியின் முதல் எட்டு வசனங்களை (3:7-14) நாம், "இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்" என்ற பாடத்தில் சுருக்கமாகக் கண்ணோக்கினோம், மற்றும் நமது வசனப்பகுதியின் பாகங்கள் மற்ற இரு பாடங்களில் உள்ளடக்கப்படும். இந்த எடுத்துரைப்பில் நாம், இவ்வசனப் பகுதியை முழுமையாகக் கண்ணோக்க விரும்புகிறோம்.*

*இந்தப் பாடத்தை நான், "கடந்த காலத்தில் இருந்து ஒரு எச்சரிக்கை" என்று அழைக்கிறேன். 3 மற்றும் 4 ஆகிய அதிகாரங்களில், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், 95ம் சங்கீதத்தை மேற்கோள் காண்பித்தார். தொழுதுகொள்வதற்கான ஒரு அழைப்புடன் தொடங்கும் அந்த சங்கீதத்தில் தாவீது, தமது குடிமக்களை உண்மைத் தன்மையுடன் இருக்கும்படி ஊக்குவிப்பதற்கு, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் அனுபவங்களைப் பயன்படுத்தினார். தேவன் பலத்த கரத்தினால் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்தார். அவர்கள் செங்கடலைக் கடந்தபின்பு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குச் செல்லும் வழியில் வனாந்தரத்தில் இருந்தனர். அவர்கள் தாங்கள் விடுவிக்கப் பட்டதற்காகத் தேவனைத் துதித்திருக்க வேண்டும், ஆனால் அதற்குப் பதிலாக அவர்கள் முறுமுறுத்து முறையிட்டனர்.[2] தண்ணீர் இல்லை என்பதைப் பற்றிய அவர்களின் முறையீடு ஒரு மாதிரி உதாரணமாக இருந்தது (யாத்திராகமம் 17:2-7; காண்க சங்கீதம் 95:8). பன்னிரெண்டு ஒற்றர்கள் கானான் நாட்டிற்குச் சென்று அறிக்கையுடன் திரும்ப வந்த அன்று, இரவு முழுவதும் மக்கள் அழுதது கடும் சோதனையான ஒரு நிகழ்வாக இருந்தது (எண்ணாகமம் 13:1-14:2). அவிசுவாசத்தின் அந்தக் காட்சிப் படுத்துதலின் காரணமாக தேவன் அவர்களிடத்தில், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க அவர்களை அனுமதிக்கப் போவதில்லை, ஆனால் அவர்கள் வனாந்தரத்தில் அழிவார்கள் என்று ஆணையிட்டார் (எண்ணாகமம் 14:22, 23, 29, 30; உபாகமம் 1:34-38; காண்க சங்கீதம் 95:10, 11).*

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் செயல்விளைவில், தாவீது தமது நாட்களில் தேவனுடைய மக்களை எச்சரிக்க அந்த வரலாற்று நிகழ்வுகளைப் பயன்படுத்த முடிந்தது என்றால், எச்சரிப்பதற்கு அவைகள் இன்னமும்*

பயன்படுத்தப்படலாம் என்று கூறினார்.[3] நாம் நமது பாடத்தினூடே செல்கையில் வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் என்ற கருத்தின்மீது முதலில் கவனம் குவித்துப் பின்பு நமக்கு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவோம்.

## பாவம்

### நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருப்பதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கிறோம்

இஸ்ரவேல் மக்கள் தங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட "நற்செய்தியை"க்[4] கொண்டிருந்தனர் (எபிரெயர் 4:2) - அவர்கள் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குச் செல்லும் வழியில் இருந்தனர் என்பதே அந்த நற்செய்தியாகும். அவர்கள் வனாந்தரத்தில் இருக்கையில், தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டிருந்தனர்[5]; அவர்கள் நாற்பது ஆண்டுகள் அளவாக அவரது பலத்த செயல்களைக் கண்டிருந்தனர் (3:9ஆ). அவர்கள் கானான் நாட்டில் "ஒரு இளைப்பாறுதலை" முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். (அந்த நாடு உபாகமம் 12:9ல் "இளைப்பாறும் இடம்" என்று அழைக்கப்பட்டது.)

அதுபோன்றே நீங்களும் நானும், நற்செய்தி (சுவிசேஷம்) நமக்குப் பிரசங்கிக்கப் பட்டதைக் கொண்டிருந்தோம் (எபிரெயர் 4:2; ரோமர் 10:15, 16), மற்றும் நாம் தேவனால் பெருக்கமாக ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். நமது வாழ்வில் அவரது கிரியையை நாம் கண்டிருக்கிறோம் (ரோமர் 8:28), மற்றும் இளைப்பாறுதலுக்குப் பரலோகத்தில் இடம் ஒன்று நமக்கு வாக்களிக்கப் பட்டுள்ளது (காண்க எபிரெயர் 4:1, 3-5, 9-11; வெளிப்படுத்தின விசேஷம் 14:13).[6]

### தேவன் விரும்புகிறபடி நாம் இருக்க வேண்டும்

நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று மற்றும் இளைப்பாறுதல் ஒன்று வாக்களிக்கப்பட்டும், தேவன் விரும்புகிறபடி இல்லாமல் போவதற்கு இன்னமும் சாத்தியம் உண்டு என்பது கவலைக்குரியதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட பின்பு பாவம் செய்தனர் (எபிரெயர் 3:17). அவர்கள் தேவனை விசுவாசிக்கவோ அல்லது அவர் மீது நம்பிக்கை வைக்கவோ இல்லை (3:18, 19; 4:2). அவர்களின் இருதயங்கள் கடினப்பட்டு இருந்தன (3:8, 10), மற்றும் அவர்கள் அவரது வழியை விட்டு விலகிச் சென்றனர்.

அதுபோன்றே, நீங்களும் நானும் பெருக்கமாக ஆசீர்வதிக்கப்பட்ட பின்பும் பாவம் செய்யக் கூடும் (3:13; காண்க 1 யோவான் 1:8, 10). நாம் தேவனை விசுவாசிக்கவும் அவர் மீது நம்பிக்கை வைக்கவும் தவறக்கூடும் (எபிரெயர் 3:12; 4:11). நமது இருதயங்கள் கடினப்படக் கூடும் மற்றும் நாம் ஜீவனுள்ள தேவனை விட்டுப் புறம்பே விழவும் கூடும் (3:12, 13; 4:11).

### விளைவுகளைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும்

விஷயம் அப்படி இருக்கும்போது, விளைவுகள் என்னவாக உள்ளன? இஸ்ரவேல் மக்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டு தேவனைவிட்டுப் பிரிந்தபோது, அவர்கள் அவருக்குக் கோபமூட்டினர் (3:9, 10).

அவர்கள் வாக்களிக்கப்பட்ட இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளவில்லை (3:11, 17, 19); அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட வில்லை.

அது போலவே, நீங்களும் நானும் நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டு விழுந்து போகும்போது, நாம் தேவனை நம்பிக்கை இழக்கச் செய்கிறோம். நம்முடைய வாழ்வில் அது நடக்கும்படி நாம் அனுமதித்தால், நாம் பரலோகத்தில் உள்ள நமது இளைப்பாறுதலில் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டோம்.

## தீர்வு

இவையாவும் உண்மையாக இருப்பதால், இந்தப் பரிதாபத்தைத் தவிர்ப்பதற்குச் செய்யப்பட வேண்டியது என்ன? இஸ்ரவேல் மக்களுக்குத் தேவைப்பட்டது என்ன, மற்றும் நமக்குத் தேவைப்படுவது என்ன?[7] நாம் பின்வருபவற்றைச் செய்ய வேண்டும்:

1. தேவனுடைய வசனத்தைக் கவனியுங்கள், உண்மையிலேயே கவனியுங்கள், அதனால் நாம் அதை அறிவோம் மற்றும் அதன் நியாயத்தீர்ப்பின்கீழ் விழாதிருப்போம் (3:7 10ஆ; 4:12).
2. விழுந்து போகுதலின் சாத்தியக்கூறு பற்றி அறிந்திருத்தல் (3:12; 4:1, 11; காண்க 1 கொரிந்தியர் 10:12).
3. நமது இருதயங்களை சரியாகக் காத்துக்கொள்ளப் பிரயாசப்படுதல் (3:12).
4. ஒருவர் மற்றவரை ஊக்கப்படுத்துதல் (3:13).
5. இன்று என்பது மாத்திரமே நாம் கொண்டுள்ள யாவுமாக உள்ளது என்பதை உணர்ந்தறிதல் (3:7, 13, 15; 4:7).
6. உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கத் தீர்மானித்தல் (3:14).
7. நாம் தேவனை வஞ்சிக்க முடியாது என்பதை உணர்ந்தறிதல் (4:12, 13).
8. இயேசுவின் மீது சார்ந்திருத்தல் (4:14-16).

எச்சரிக்கைச் சின்னங்களைப் புறக்கணித்தல் மதியீனமானதாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரால் தரப்பட்ட எச்சரிக்கையை நாம் கவனிப்போமாக. கடந்தகாலத்தில் இருந்து கற்றுக்கொள்ளாதவர்கள் அதைத் திரும்ப நடப்பிக்க அழிவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு நடந்தவற்றில் இருந்து நாம் கற்றுக்கொண்டு அவர்களின் தவறுகளைத் திரும்பவும் செய்யாதிருப்போமாக.

## போதகருக்குக் குறிப்புகள்

பழைய ஏற்பாட்டைப் பற்றி சில அறிவு இல்லாத நிலையில், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் பெரும்பகுதி புரிந்துகொள்ளப்படவோ அல்லது மதிக்கப்படவோ முடியாது. இந்தப் பாடத்திற்கான தயாரிப்பில் நீங்கள், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் அலைந்து திரிந்தது பற்றி அறிந்து கொள்ளவும் சங்கீதம் 95:7ஆ-11 வசனப்பகுதியை நன்கு பழக்கமாக்கிக் கொள்ளவும்

*விரும்புவீர்கள்.*

*3:1-14ன் மீதான பாடம், செய்ய வேண்டியவற்றைப் பற்றிய ஒரு பட்டியலை - இந்தப் பாடத்திற்கான வசனப்பகுதியின் முதல் பாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பட்டியலை - தந்தபடியால், இப்பாடத்தின் பிற்பகுதிக்கு நீங்கள் மாறுபட்ட ஒரு அணுகுமுறையைப் பயன்படுத்த விரும்பலாம். இஸ்ரவேல் மக்கள் விழுந்துபோன அந்தப் பரிதாபத்தை நமது வாழ்வில் நடைமுறை ஆலோசனைகளைப் பட்டியலிடும்படி வகுப்பு உறுப்பினர்களிடம் நீங்கள் கேட்க முடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]"ஊக்கமூட்டுதலுக்கான ஒரு வார்த்தை" என்ற பாடத்தில் உள்ள வரைகுறிப்பைக் காணவும். [2]இந்தப் பாடத்திற்குப் பின்னணியாக நீங்கள், வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களைக் குறித்த திறவுகோல் நிகழ்வுகளைத் திரும்ப எண்ணிப்பார்க்க விரும்பலாம். [3]கிறிஸ்தவர்களை எச்சரிக்க, வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைப் பயன்படுத்துதலுக்கான இன்னொரு உதாரணம் 1 கொரிந்தியர் 10:1-13ல் காணப்பட முடியும். இந்தப் பாடத்தின்போது நீங்கள் அந்த வசனப்பகுதியைக் குறிப்பிட விரும்பலாம். [4]"நற்செய்தி" என்ற வார்த்தை "சுவிசேஷம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [5]அந்த ஆசீர்வாதங்களில் சிலவற்றைப் பட்டியலிடுங்கள்: வானத்தில் இருந்து மன்னா, விரோதிகளிடம் இருந்து பாதுகாப்பு மற்றும் பிற. [6]ஞாயிற்றுக்கிழமை "கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள்" அல்ல. கிறிஸ்தவர்களின் "ஓய்வு" பரலோகத்தில் இருக்கும். [7]இந்தப் பட்டியல், "இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்" என்ற பாடத்தில் உள்ள பட்டியலைப் போன்றதாகவே உள்ளது. "போதகருக்கான குறிப்புகள்" என்ற பகுதியானது படிப்பின் இந்தப் பாகத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடிய மாறுபட்ட ஒரு அணுகுமுறையை அளிக்கிறது.*